IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.68/2012
Advocate Commissioner CW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | B.G.Balaji | Caste | : | |
| | : | Advocate Commissioner | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. சர்வே எண்.42/3b அதில் 38.5 ஏர் (95 சென்ட்) என்ற சொத்து பிரிக்கப்படுவதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் அதை நான் குறிப்பிடவில்லை. நானே அதே சர்வே எண்ணில் 38.5 ஏர் ராமலிங்கம் என்பவர் பெயரில் அ–பதிவேட்டில் இருந்தது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அறிக்கையில் நான் சொல்லியிருந்தால் அது சரியானது ஆகும். அ–பதிவேட்டை யார் எனக்கு கொடுத்தது என்று நியாபகம் இல்லை. தற்போது உள்ள அ–பதிவேட்டில் யார் பெயர் உள்ளது என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய அறிக்கையை முழுமையாக விசாரணை செய்யாமல் தவறுதலாக குறிப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளதால் என் அறிக்கையை நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

2. 1982– ல் உள்ள உரிமையாளரைப் பற்றி எனது அறிக்கையில் குறிப்பிடும் போது 1987 ல் கிரையம் வாங்கிய தாவா சொத்தின் உரிமையாளர் ஆஞ்சநேயரைப் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் என்னிடம் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த அறிக்கையின் படி நான் தாக்கல் செய்தேன். 04.10.1988–ல் ஆஞ்சநேயர் பெயரில் பட்டா வந்துள்ளது அதைப் பற்றி நான் சொல்லவில்லை என்று சொன்னால்

என்னிடம் கொடுக்கப்பட்ட ஆவணத்தை வைத்து தான் நான் குறிப்பிட்டேன். கொடுக்காததைப் பற்றி நான் குறிப்பிடவில்லை.

3. வழக்கு சொத்திற்குண்டான ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் சரியாக கேட்டுப் பெறாமல் அரைகுறையாக என்னுடைய அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் என்னிடம் கொடுக்கப்பட்ட ஆவணத்தை வைத்து தான் நான் போட முடியும். சர்வே எண். 42/3b லிருந்து சர்வே எண். 42/3b2 என்று உட்பிரிவு ஆகியுள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். என்ன காரணத்திற்காக உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னுடைய அறிக்கையை நான் சரியாக தாக்கல் செய்யாததால் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI